# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை : திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண் 45 / 2016**

திருமதி. M. சுமதி,
த/பெ T. முனியாச்சாரி,
18/52–A, சன்னதி தெரு,
சோளிங்கர் – 631 102,
வாலாஜா வட்டம், வேலூர் மாவட்டம். ..... மேல் முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
வேலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
காந்தி நகர்,
வேலூர் – 632 006. ...... எதிர் மனுதாரர்

**ஆணை நாள் – 31.8. 2016**

1. திருமதி. M. சுமதி, த/பெ T. முனியாச்சாரி, சோளிங்கர் அவர்களின் 2.6.2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.45/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மின்இணைப்பு எண். 271–010–390, திருமதி. K. வரலட்சுமி, அவர்களின் விண்ணபத்தின் பேரில் திரு. T. முனியாச்சாரி பெயரிலிருந்து திருமதி. K. வரலட்சுமி அவர்களின் பெயருக்கு 21.1.2016 அன்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பெயர் மாற்றதை ரத்து செய்யவேண்டும் என்று திருமதி. M. சுமதி, அவர்கள் வேலூர் மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார்கள்.

3. வழக்கு எண்.O.S. No.37/2014, நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளதால் அதன் மீது தீர்வு வழங்க முடியாது என்று மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறைதீர்ப்பாளருக்கான விதிகள் 17(4)(ஈ)—ஐ சுட்டிக்காட்டி மன்றம் தன்னுடைய தீர்வை வழங்கியுள்ளது. மேற்கண்ட தீர்வில் அதிருப்தியுற்ற மனுதாரர் இந்த மேல்முறையீட்டை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

4. மேல்முறையீட்டாளரின் மனுவின் நகல், மேற்பார்வை பொறியாளர், வேலூர் மின்பகிர்மான வட்டம் அவர்களுக்கு அனுப்பப்பட்டு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லையெனில் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று மின்குறைதீர்ப்பாளரின் 14.6.2016 நாளிட்ட அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

5. எதிர்மனுதாரராகிய மேற்பார்வை பொறியாளர் / வேலூர் மின்பகிர்மான வட்டம் அவர்கள் தன்னுடைய பதிலுரையை 8.8.2016 நாளிட்ட கடிதத்துடன் சமர்ப்பித்துள்ளார்.

6. மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 23.8.2016 அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பாக கேட்புரை நடத்தப்பட்டது.

7. மேல்முறையீட்டாளர் திருமதி. M. சுமதி, அவர்கள் கேட்புரையில் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

8. எதிர்மனுதாரர் சார்பில் திரு. P. சலபதிராஜ், செயற்பொறியாளர்/சோளிங்கர் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

9. மேல்முறையீட்டாளர் திருமதி. M. சுமதி, சோளிங்கர் அவர்கள் தன்னுடைய 26.8.2016 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட மின்இணைப்பு எண்.271—010—390—ஐ பத்திரத்தில் காட்டியுள்ளபடி திருமதி. K. வரலட்சுமி, அவர்களுக்கு விட்டுக் கொடுப்பதாக தெரிவித்து, இந்த வழக்கை சுமூகமாக முடித்து வைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார். அந்த 26.8.2016 நாளிட்ட கடிதத்தின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 23.8.2016 அன்று தங்கள் தலைமையில் விசாரணை நடந்தது. அதில் தங்களின் அறிவுரைகளை குடும்ப பெரியவர்களிடம் முறையிட்டோம். மின்இணைப்பு எண்.271—010—390 உள்ளதை பத்திரத்தில் சுட்டிக்காட்டியபடி K. வரலட்சுமிக்கு விட்டுக் கொடுக்குமாறு குடும்ப நலனில் அக்கறைக் கொண்டுள்ள பெரியவர்கள் சொன்னார்கள். அதன்படி விட்டுக் கொடுத்து விட்டோம். திரு. செயற்பொறியாளர் அவர்கள் புதிய மின்இணைப்பு கொடுப்பதாக சொன்னார்கள். இந்த*

*விசாரணை இத்துடன் சுமூகமான முறையில் முடித்துக் கொடுக்கும்படி தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். தங்களின் வேண்டுகோளின்படி O.S.37/2014 கேஸ் நகல் இத்துடன் இணைத்துள்ளேன். மேலும், தாங்கள் திரு. மேற்பார்வை பொறியாளர் மற்றும் திரு. செயற்பொறியாளர் அவர்கள் இந்த விசாரணைக்கு பல அலுவல் நேரங்களை என் பிரச்சனைக்காக ஒதுக்கி தங்களுடைய அறிவுரையின்படி சுமூகமாக முடித்து கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.''*

10. மேற்கண்ட கடிதத்தின்படி மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு எண்.271–010–390–ஐ திருமதி. K. வரலட்சுமி, அவர்களுக்கு விட்டுக் கொடுக்கிறேன் என்று தெரிவித்துள்ளார். எனவே, அவர் மின்இணைப்பு எண்.271–010–390–ஐ திருமதி. K. வரலட்சுமி அவர்களின் பெயருக்கு மாற்றம் செய்வதை ரத்து செய்ய வேண்டும் என்ற தன்னுடைய மேல்முறையீட்டு மனுவின் கோரிக்கையை வலியுறுத்தவில்லை என்று தெரிகிறது. மேலும், இந்த வழக்கை சுமூகமாக முடித்து வைக்க வேண்டும் என்று மேல்முறையீட்டாளர் கோரியுள்ளதால் மேல்முறையீட்டாளர் மனு எண்.45/2016 முடித்து வைக்கப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
1) திருமதி. M. சுமதி,
த/பெ T. முனியாச்சாரி,
18/52–A, சன்னதி தெரு,
சோளிங்கர் – 631 102,
வாலாஜா வட்டம், வேலூர் மாவட்டம்.

2) மேற்பார்வை பொறியாளர்,
வேலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
காந்தி நகர்,
வேலூர் – 632 006.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
வேலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
காந்தி நகர், வேலூர் – 632 006.

4) தலைவர்  மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,  சென்னை – 600 002.

5)  செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி  லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6)  உதவி இயக்குநர் (கணினி)  –   **<u>மின் குறைதீர்ப்பாளரின்  இணையதளத்தில்  வெளியிடுவதற்காக</u>**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி  லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.